செ.வெ.எண்: 2 நாள்:01.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக்கடைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை மற்றும் புதுக்கோட்டை வட்டங்களில் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் புதிய பகுதி நேர நியாயவிலைக்கடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் 31.07.2016 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்த பகுதி நேர நியாயவிலைக்கடைகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று புதுக்கோட்டை தாலுகா, வாராப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நடத்தும் வாராப்பூர் தலைமையிட அங்காடியிலிருந்து நெறிஞ்சிப்பட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாயவிலைக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. வாராப்பூர் அங்காடியில் உள்ள 505 குடும்ப அட்டையிலிருந்து நெரிஞ்சிப்பட்டியை சேர்ந்த 203 குடும்ப அட்டைகளை தனியாக பிரித்து புதிய பகுதிநேர நியாயவிலைக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த பகுதிநேர நியாயவிலைக்கடை செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிழமைகளில் காலை 9 மணி முதல் 1 மணி வரையிலும், மதியம் 2 மணி முதல் 6 மணி வரையிலும் செயல்படும். இதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பல்வேறு அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் தரமாக பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் பொதுமக்களின் நேரம், வீண்அலைச்சல் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து பொதுமக்களும் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் பேசினார்.

இந்த பகுதி நேர நியாயவிலைக்கடைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கந்தர்வக்கோட்டை தாலுகா, துவார் கிராமத்தில் ஆலங்குடி கூட்டுறவு உற்பத்தி சங்கம் நடத்தும் தலைமை அங்காடியிலிருந்து பிரித்து ஆண்டிகுளப்பன்பட்டியில் புதிய பகுதிநேர நியாயவிலைக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதில் துவார் அங்காடியில் இருந்த 655 குடும்ப அட்டைதாரர்களில் ஆண்டிகுளப்பன்பட்டியில் உள்ள 143 குடும்ப அட்டைதாரர்களையும், எல்லைதாராப்பட்டியில் உள்ள 7 குடும்பஅட்டைதாரர்களையும் என மொத்தம் 150 குடும்பஅட்டைதாரர்களை தனியாக பிரித்து ஆண்டிகுளப்பன்பட்டியில் புதிய பகுதிநேர நியாயவிலைக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த பகுதி நேர நியாயவிலைக்கடை வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் காலை 9 மணிமுதல் 1 மணி வரையிலும், மதியம் 2 மணி முதல் 6 மணி வரையிலும் செயல்படும். இதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அரிசி, பருப்பு, பாமாயில், மண்ணெண்ணெய், சர்க்கரை, உப்பு போன்ற பல்வேறு உணவுப்பொருட்களை குறைந்த விலையில் பெற்று பயனடையலாம். இப்பகுதி பொதுமக்கள் இனிமேல் திருமயத்திற்கு சென்று பொருட்கள் வாங்குவது தவிர்க்கப்பட்டதுடன் நேரம் மிச்சம், அலைச்சல் தவிர்ப்பு போன்ற பல்வேறு நன்மைகள் ஏற்படும். எனவே அனைத்து பொதுமக்களும் தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்டங்களை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், பொது விநியோகத்திட்டத்தின் துணைப்பதிவாளர் திரு.சு.சதீஷ்குமார், துணை சார் பதிவாளர்கள் திரு.ராம்சேகர், திரு.ஆறுமுகப்பெருமாள், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, ஒன்றியக்குழுத்தலைவர்கள் திருமதி.வெள்ளையம்மாள்பழனிவேலு, திரு.சின்னப்பா, ஆத்மா குழுத்தலைவர் திரு.ரங்கராஜன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.செங்கொடியான், திரு.ராமசாமி, ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.மகாலெட்சுமி, கூட்டுறவு சங்கச்செயலாளர் திரு.சுப்ரமணியன், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் திரு.கண்ணன், திரு.ராஜசேகர், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**